**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,**

**TIRUVANNAMALAI.**

**O.S. 32/2021 DW1**

23.09.2025 **பி.வா.சா.1 பழனி சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

வாதி எனது தாயார் என்றால் சரிதான். 2 முதல் 11 பிரதிவாதிகள் வழக்கு 2ம் இலக்க சொத்தை என்னிடம் கிரையம் பெற்றவர்கள் என்றால் சரிதான். வழக்கு அட்டவணை சொத்தானது ஆதியில் சர்வே எண் 89/1 - 1 ஏக்கர் 58 செண்ட் நிலத்தில் இருந்து பிரிந்து வந்ததாகும் என்றால் சரிதான். ஆதியில் அருணாச்சல கவுண்டர், மாணிக்க கவுண்டர், கோவிந்தராஜ் முதலியார் ஆகியோர் பெயரில் ஆதியில் பட்டா எண் 625 ஆக இருந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா எண் 625 தான் மேற்படி பட்டாவாகும் அது வா.சா.ஆ.6. மேற்படி பட்டா சொத்தானது மாணிக்க கவுண்டருக்கு அவரது கூட்டு குடும்பத்தில் வாய்மொழி பாகமாக வந்த சொத்து என்றால் சரிதான். மேற்படி பட்டா 625 சொத்தானது 89/1பி, 89/1எப் என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாணிக்க கவுண்டருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி எல்லம்மாள், இரண்டாவது மனைவி எல்லம்மாளின் சகோதரியான அமிர்ததம்மாள் என்றால் சரிதான். மாணிக்க கவுண்டருக்கு எல்லாம்மாள் மூலம் குழந்தை இல்லை என்பதால் அமிர்த்தம்மாளை இரண்டாவது திருமணம் செய்தார் என்றால் சரிதான். மாணிக்க கவுண்டர் 1976ல் இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாணிக்க கவுண்டருக்கு வாதி மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். அவர் இறக்கும் போது அமிர்தம்மாள் உயிரோடு இருந்தார் என்றால் சரிதான். மாணிக்க கவுண்டர் இறப்பிற்கு பிறகு வாதியும், அமிர்தம்மாளும் சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அமிர்தம்மாள் இறக்கும் வரை உண்ணாமலையின் சவரட்டசணையில் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் எனக்கு 1998ல் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். 1998ல் எனக்கு திருமணம் ஆகி நான் தனியாக பிரிந்து குடும்பம் நடத்தினேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோர் என்னை அனுப்பி விட்டார்கள். என்ன காரணத்திற்காக என்னை என் பெற்றோர்கள் அனுப்பினார்கள் என கேட்டால் என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. நான் தனியாக சென்று விட்டதால் எனது பெற்றோரை நான் கவனிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2004ம் வருடம் அமிர்தம்மாளுக்கு சுமார் 70 வயதிருக்கும் என்றால் சரிதான். அவருக்கு அப்போது கண் பார்வை குறைவு மற்றும் வயோதிக்கத்தால் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல மற்றொருவர் உதவி அவருக்கு

தேவையாக இருந்தது என்றால் சரியல்ல. அமிர்தம்மாளுக்கு எழுத படிக்க தெரியாது என்றும், கையொப்பம் மட்டும் தான் போடுவார் என்றால் சரியல்ல. அமிர்தம்மாளுக்கு எழுத படிக்க தெரியாது என்பதை சாதகமாக எடுத்துக் கொண்டு 04.11.2004ல் வழக்கு சொத்துக்களை பொருத்து ஏமாற்றி ஒரு தானப் பத்திரத்தை எனது பெயருக்கு எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்கண்டவாறு ஒரு தானபத்திரத்தை எழுதிக் கொடுக்க அமிர்தம்மாளுக்கு முழு உரிமையில்லை என்றால் சரியல்ல. மாணிக்க கவுண்டர் இறப்பிற்கு பிறகு அமிர்தம்மாளின் வயோதிக காரணமாக உண்ணாமலை மட்டும் தான் முழு சொத்தையும் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் தானபத்திரத்தின் அடிப்படையில் கோரமுடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 சட்ட அறிவிப்பை 04.10.2012ல் வாதி தரப்பில் எனக்கும், கிரையம் பெற்றவர்களுக்கும் அனுப்பினார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். பிறகு வாதி எனக்கு எதிராக போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S. 182/2013 வழக்கை என் மீது தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். பிறகு மேற்படி வழக்கானது நீதித்துறை அதிகார வரம்பு காரணமாக கலசபாக்கம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாறுதலாகி அது O.S. 77/2019 ஆக வழக்கு பதிவானது என்றால் சரிதான். அந்த வழக்கில் அப்போது உண்ணாமலை கிரையதாரர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கானது 21.12.2020ல் தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பில் வாதிக்கு வழக்கு சொத்தில் பாதி பாகம் உண்டு எனவும், நான் பெற்ற 04.11.2004 தேதியிட்ட தான பத்திரம் வாதியின் பாகத்தை பொருத்து கட்டுப்படுத்தாது என தீர்ப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேலும் அந்த தீர்ப்பில் கிரையம் பெற்றவர்களை சேர்க்காததாலும், உரிமை விளம்புகை நிவாரணம் கோரி தாக்கல் செய்ததாலும், வழக்கு தள்ளுபடி செய்ததாகவும், மேலும் உண்ணாமலை தனியாக பாக வழக்கு தாக்கல் செய்து கொள்ளலாம் என சொல்லி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் பேரில் நான் மேல்முறையீடு ஏதும் செய்யவில்லை என்றால் சரிதான். (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.